Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்துசாதனம்

[விரோதி ஞ] (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரிஞூ மார்கழிமீ கசூஉ வெள்ளிக்கிழமை (30 December 1960) [இல-நுகூ]

அரசியல் அலை

# அவசரகாலம் இல்லையாம் ஆனல் அவசரமான அலுவல்கள்!

## வட கரைக்கு விரைந்தேகும் கடற் படைக் கப்பல்கள்

அவசரகாலத்தில் அல்லவா ஒலிபெருக்கித் தடை ஊர்வலத்தடை இன்னும் இவைபோன்ற பல தடைகள் விதிக்கப்படுவன. அப்படி ஏதாவது அவசர நிலைமை இருக்கின்றதா என்றல் இல்லை ஒருபொழுதும் இலைல் என்று அரசாங்கம் அறுதியிட்டுக் கூறுகின்றது. ஆனல் நடப்பது என்ன?

ஒலிபெருக்கி உபயோகிக்கப்படாதென்று தடை, தடையை மீறியவர்கள்மீது வழக்கு, குற்றத்தை ஒப்புக் கொண்டவர்களுக்குச் சற்று எச்சரிக்கை இந்த விதமாக ஒரு நாடகம் நடத்தப் பெறுகின்றது. யார் நன்மைக்கோ நாமறியோம்

பள்ளிக்கூட வளவுகளிற் கட்டிடங்களிற் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றனவாம் - ஆனல் அவசரகாலமும் இல்லையாம். குழந்தை வயதுப் பிள்ளைகள் மூன்றுந் திகதி தைமாதம் பள்ளிக்கூடஞ் செல்ல வேண்டியவர்கள், எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்ற ஐயுறவுடன் செல்லவேண்டிய நிலைமை, ஆனல் அவசரநிலைமை இல்லையாம்!

வட பகுதியில் ஒரு அரசியற்கட்சி வேலைநிறுத்தம் என்று வெளியிட்ட அறிக்கையைக் கண்டதும் அப்பகுதிக்குக் கடற் படைக் கப்பல்கள் உடனடியாகச் செல்கின்றனவாம் - ஆனல் அவசர நிலைமையும் இல்லையாம்.

இந்த வகையிலே எங்கும் மனச் சஞ்சலம் ஏற்பட்டிருக்கும் பொழுது முதல் அமைச்சர் கவலையற்ற காவலன்போலத் தீர்த்த யாத்திரை செய்கின்றனரே — அதில் அவசியமும் அவசரமும். எப்படி உண்டாயினவோ தெரியவில்லை.

முதன் முதலாக வெளிநாடு சென்ற இந்தமுதலமைச்சர் புறப்பட்டபொழுது பெண்கள் கண்கள் நீர்பெருகக் கவலைப்பட்டு கறுப்புக் கொடி காட்டினர்கள் அல்லவா? அதேநிலையில் அந்த சிறிமாவோ அம்மையார் விமான நிலையத்தில் நின்று கண் கலங்கி அருமை மைந்தன் நோய் வாய்ப்பட்டதை நினைந்து மனம் நொந்தனராம்; ஏழை அழுதகண்ணீரின் ஆற்றல் இம்மட்டா!

### காரைநகரில் மணிவாசகர் விழா

காரைநகர்ச் சிவன் கோயிலில் மணிவாசகர் விழா நேற்று ஆரம்பமாகி வழக்கம்போற் சிறப்பாக நடைபெறுகின்றது. திரு. ச. தண்டபாணி தேசிகர் முதலிய பல இந்திய பேரறிஞர்களும் விழாவிற் பங்குபற்றுகின்றனர்.

### நற்சிந்தனை

மாண்டு போனவர்
என்பர் மார்பினில்
பூண்ட அன்பனைப்
போற்ற இன்பமே.

பித்த னென்றவர்
பிறவி நீக்கிய
அத்தன் சேவடி
அடைய இன்பமே.

(சிவ தொண்டன்)

### முஸ்லிம்களும் பாதிக்கப்படுவார்கள்

மொழிமாற்றம் தமிழரை மாத்திரமன்றி முஸ்லிம்களையும் பாதிக்கும். தகுந்த நடவடிக்கை எடாவிட்டால் முஸ்லிம் சமூகம் பெரிதும் பாதிக்கப்படும் என எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். மொழி மாற்றத்தை எதிர்த்து முஸ்லிம் ஆசிரியர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்ததைக் கண்டு மகிழ்கிறேன்.

கல்முனைப்பிரதிநிதி ஸ்ரீ. அப்துல் மஜீது மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

### ஆறு அறிவைப்பெற்றும் மனிதன் அடைந்த நன்மை என்ன?

உலகத்திலே, ஒரு அறிவு அல்ல, இரண்டு அறிவு அல்ல ஆறு அறிவு நிரம்பப்பெற்ற மனிதர்களால்தான் கடூரமான குற்றங்கள் செய்யப்படுகின்றன. கருணை மிகுந்த கடவுள் மனிதருக்கு ஆறு அறிவைக் கொடுத்ததில்தான் என்ன பயன் கண்டோம். நம்மவர்களிடையே காணப்படும் மிருக உணர்ச்சி இன்னமும் குறைந்தபாடில்லையே.

சீர்திருத்தம் அற்றவர்கள், நீதிஎது நியாயம்எது என்று அறியாதவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள், இக்குறைபாடுகள் காரணமாகப் பல பல பிழைகளைச் செய்திருக்கலாம். ஆனல் இன்றைய உலகில் எந்த மூலைமுடுக்குகளிலும் உள்ள மனிதர்தானும் அறிவு ஆற்றல் இன்றி இருக்கிருரா? இல்லை. ஏன் அவர்கள் குற்றங்களுக்கு ஆளாக வேண்டும்.

உலகத்திலே இன்றுகாணப்படும் குற்றங்களைப் பாருங்கள். ஒரு நாட்டவன் பேராசை காரணமாக இன்னெரு வன்நாட்டைப் பிடிக்கிறன். இதனல் நாடுகளுக்கிடையிற் பகை உண்டாகின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு கட்சிகள் தோன்றிப்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

திரு. இ. நா. தியாகராசா, சரவணை.

# சைவமும் தமிழும் சிறந்தோங்கத் தொண்டாற்றும் சைவ சித்தாந்த மாகா சமாசம்

## பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பெற வேண்டிய திருக்கேதீச்சர மகாநாட்டு நிகழ்ச்சி

### சைவ சித்தாந்த மகாநாட்டில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் வரவேற்புரை

"பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி லெழிற்றிகழ் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே"
- சம்பந்தர்,

சைவப் பெருமக்களே! தாய்மார்களே! அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் அடியேனின் வணக்கம்.

பழைமையும், பெருமையும் வாய்ந்த திருக்கேதீச்சரத்து வரலாற்றிலே இவ்விழா நிகழ்ச்சி, பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்படவேண்டியதொன்று. மூன்று நாட்கள் இங்கே தங்கி அளவளாவி மகிழவும், அரிய சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறவும் பெரிய வாய்ப்பினைக் கேதீச்சரத்தான் நமக்கெல்லாம் அளித்து அருளியுள்ளான். இவ் விழா விலே கலந்துகொள்ள இன்னருள் புரிந்த கேதீச்சரத் தானை வாழ்த்தி வணங்குவதோடு இப் பெரும் பழமைபெற்ற சில நாட்கள் தங்குவதற்குக் கிடைத்த வாய்ப்பினையும் நினைந்து சைவப்பெருமக்களாகிய நாம் எல்லோரும் பெருமகிழ்ச்சி யடையவேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். இவ்வரிய வாய்ப்பினை வழங்கிய சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தாருக்கு, ஈழத்துத் தமிழ்ப் பெருமக்கள் சார்பில் எனது மனமார்ந்த நன்றியறிதலை முதற்கண் கூற விழைகின்றேன்.

'கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி' என்று தமிழினத்தின் தொன்மை போற்றிப் பேசப்படுகின்றது. தமிழ் இனத்தைப் போலவே தமிழ்மொழியும் மிகவும் பழமை யானது; பண்பட்டது. அதேபோலத் தமிழர்கள் கண்ட கடவுட் கொள்கையும் பழைமையும் பெருமையும் வாய்ந்தது; உண்மையும் உயர்வும் உடையது. அவர்கள் அன்று கண்ட சிவநெறிக் கொள்கையே இன்று 'சைவம்' என்ற பெயரில் வழங்குகின்றது. சைவ சமயத்திலே எல்லாச் சமய உண்மைகளும் அடங்கியுள்ளன. எனவே சைவ சமயம் ஒரு தனிச் சமயம் அன்று என்பதும், அது சமயங் கடந்த சமரசம் - சன்மார்க்கம் என்பதும் ஆய்வோர்க்கு நன்கு புலனுகும். இவ்வாறு தொன்மையும், சிறப்பும் வாய்ந்த சைவ சமயத்தை இந்தியாவிலும் இலங்கையிலும் பேணி வளர்க்கவும், தென்கிழக்குஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் ஏனைய சமயத்தாரிடையே சைவத்தின் மாண்பை மிளிர வைக்கவும் இந் நூற்றுண்டின் திருப்பத்தில் சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜம் நிறுவப்பட்டது.

மேலும், உலக தத்துவ ஞானிகள் யாவரும் நந்தமிழர்கள் கண்ட சைவசமயத்தின் மெய்ப்பொருள் உண்மைகளை உணர்வதற்கும் அது அரிய வாய்ப்பினை அளிக்கின்றது. இன்னும் சமயத்தை வளர்ப்பதோடு நில்லாமல் தமிழ்மொழி வளரவும் உழைத்து வந்துள்ளது. இவ்வாறு இச் சமாஜம் கடந்த அரை நூற்றுண்டு காலமாகச் செய்துவந்துள்ள அரும் பணிகளை விரித்துரைக்கின் நீண்டு கொண்டே செல்லும்.

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு ஈழத்துச் சைவப் பெருமக்கள் நெருங்கிய தொடர்பும், உறவும் உள்ளவர்களாய் இருந்து வந்துள்ளதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். சமாஜம் நிறுவப் பெற்றபின் 1905 - ஆம் ஆண்டு நடந்த முதல் ஆண்டு விழாவிற்குத் தலைமைதாங்க ஈழத்திலிருந்து சேர் பொன். இராமநாதன் அவர்கள் அழைக்கப்பட்டார்கள். பின், 1955-ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நிகழ்ந்த பொன் விழாவிற்கு உயர் திரு சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமைதாங்கினர்கள். இன்னும் சமாஜத்தின் உறுப்பினரான பல சைவப் பெரியார்களும்,

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எங்கள் அறிவித்தல்

மார்கழி 19 உ திங்கட்கிழமை (2-1-61) சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் திருவாதிரைத் திருநாளின் பொருட்டு மூடப்பட்டிருக்கு மென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்,

— அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சார்வரி ௵ மார்கழி ௴
௧௬ உ வெள்ளிக்கிழமை

## திருக்கேதீச்சரத்திற் சைவ சித்தாந்த மாநாடு

தேவாரச்சீரமைந்த திருக்கேதீச்சரத் திருத்தலத்திலே சைவ சித்தாந்த மாநாடு நிகழ்வது சிறப்புடன் பொருத்தமாகின்றது. இலங்கைவாழ் சைவ மக்கள் இன்னற்பட்டு இடருறும் இவ்வேளையில் "அல்லல் என்செயும் அருவினை என்செயும்... ... ... தில்லைமாநகர்ச் சிற்றம்பலவனுர்க் கெல்லையில்லதோர் அடிமை பூண்டேனுக்கே" என்ற சால்பை எடுத்துக்காட்டும் சைவச் சங்கம் கூடித் தெய்வப் பண்பை நினைவூட்டுவது வேண்டப்பெறுவதே.

மாநாடு கூடுவதும் பேருரைகள் நிகழ்த்துவதும் அவ்வளவிற் சைவ சமய பரிபாலனத்துக்கும் வளர்ச்சிக்கும் பெரும்பயனளிக்கப் போதுமானவையாக யாம் கருதி நிற்றல் ஆகாது. மேன்மை கோள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம் என்று வேண்டித் திருத்தொண்டர்கள் பணிசெய்து நின்றனர். ஆனல் இன்று உலகைப்பற்றி என் சொல்லவேண்டும். சைவத்தின் பழம் பரம்பரை நாடாகிய ஈழத்திலே சைவப் பெற்றூர்கள் தங்கள் பிள்ளைகளைச் சைவ மணங்கமழும் சைவக்கல்விக் கழகங்களிலே பயிற்றுவிக்க ஒண்ணாத நிலையில் இருக்கின்றூர்கள். ஆகவே மாநாடு சைவப்பணிபுரியும் வகையில் இவ்வாறு சைவ மக்கள் இன்னற்படுவதை ஆராய்ந்து ஆவன செய்ய முன்வருதல் வேண்டும்.

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசம் சிறந்த தெய்வப் பணியாற்றிய பெருமையோடு திகழ்வது. சைவமும் தமிழும் வளர்த்த நற்றகையார் நாவலர் அவர்களின் பின் அப்பெருந் தொண்டாற்றிய பரோபகாரச் சீலர், கொடை வள்ளல், சமய சமூக அரசியற் பேரறிஞர், வீரர் பொன் இராமநாதன் அவர்கள் இச்சமாசம் உருவாகிய காலத்தில் அதன் தலைவராக விளங்கினர் என்பது மகிமைக்குரிய தொன்றாகும். சென்னை நாட்டிலுள்ள சைவ சித்தாந்தப் புலமைமிக்கவர்கள் செயலாற்றும் சமாசம், ஈழத்துச் சைவ அன்பர்களும் அத்தொண்டில் ஈடுற்றுப் பயனளிக்கும் வண்ணம் பரந்த மனப்பான்மையில் நடைபெற்று வருவது மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

தொண்டர் நாடோறும் துதிசெய்ய அருள்செய் திருக்கேதீச்சரத்திலே கூடும் சைவமாநாட்டுப் பேரன்பர்கள் மேன்மைகொள் சைவநீதி உலகத்தில் விளங்கா விட்டாலும் இந்திய நாட்டிலும் ஈழ தேசத்திலும் அன்றுபோல் என்றும் நின்று நிலவும் வண்ணம் தெய்வப் பணியாற்ற வேண்டியவர்களா யிருக்கின்றனர்.

பள்ளிக்கூடங்களை அரசினர் கைப்பற்றிக்கொள்ளவாளா விருக்கும் சைவமக்கள் உண்மையில் சைவ சமய வளர்ச்சிக்கு எவ்வண்ணம் பணியாற்றக்கூடும் என்ற ஒரு கேள்வி எழுகின்றது. இவ் வினவிற்கு விடைகொடுக்க வேண்டியவர்கள் இன்று திருக்கேதீச்சரத்திலே சைவ மாநாடு கூடிநிற்கும் ஈழத்துச் சைவமக்களே சைவ வாழ்வுக்கு உறுதுணையாகவுள்ளன திருக்கோயில்களும் கல்விக் கழகங்களுமே. இதுவரையும் பள்ளிக் கூடங்கள் அவ்விதமாக இயங்கின. எல்லா மதங்களும் அரசு நடத்தும் கொள்கையில் ஒன்றே என்று சொல்லாற் சுவைபெறக் கூறும் அரசியலார், ஒரு மதத்துக்கும் இல்லாதவர்கள் என்பது உலகறிந்த உண்மை. அவ்விதமான அரசியல் அமைப்பில் அமைந்து நடைபெறுநாமாகப் பள்ளிக் கூடங்களை ஆட்சியாளர்களை நாடிக் கொடுத்து விட்டோம். எனவே சைவ வாழ்வு முன்னேற்றமடைவதற்கு நாமே பின்னேக்கிச் சென்று தடை விதிக்கின்றோ மல்லவா?

வேதநெறித் தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க அவதரித்த திருஞானசம்பந்த சுவாமிகள் அகக்கண் நோக்கஞ் செய்து வணக்கஞ் செய்த திருக்கேதீச்சரத்திற் குழுமியிருக்கும் சைவாபிமானிகள் 'மிகு சைவத் துறை' ஈழத்தில் சைவப் பள்ளிக்கூடங்களின்றி எவ்வாறு விளங்க முடியும் என்பதற்கு விடைகூறி வழிகோலுவார்களாக.

அரசு பிழைத்தமையால் அலலற் படுகின்ற ஈழத்துச் சைவ மக்களுக்குச் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசப் பேரறிஞர்கள் அறிவுரை பகர்ந்து ஆற்[illegible]

—0—

### சைவ பரிபாலன சபைத் தலைவர் வரவு

=0=

சைவபரிபாலனசபைத்தலைவரும் இந்துக்கல்லூரியுடன் இணைந்தகல்லூரிகளின் அதிபருமாகிய திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்து திரும்பி வந்துள்ளார். பிரித்தானியா பிரான்சு முதலிய நாடுகளையும் பல சர்வகலாசாலைகளையும் பார்வையிட்டதோடு இங்கிலாந்திலிருந்த காலத்தில் அவர் உயர்தர நியாயவாதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

——

## ஆருத்திரா தரிசனம்

( 2—1—61 )



### போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்

போற்றியருளுகநின் னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறுமிணையடிகள்
போற்றியாணுன்முகனுங்காணுதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய்

# சைவமும் தமிழும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

அறிஞர்களும் விழாக்களில் தலைமைதாங்கவும், சொற்பொழிவு நிகழ்த்தவும் இங்கிருந்து அடிக்கடி அழைக்கப்பட்டுள்ளனர். அல்லாமலும் இந்தியாவிற்கு வெளியே முதன் முதல் 1948-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும், 1950-ஆம் ஆண்டு கொழும்பிலும் இச்சமாஜத்தாரின் ஆண்டு விழாக்கள் நடைபெற்றன. பத்து ஆண்டுகள் கழித்து மீண்டும் சமாஜத்தின் 55 ஆவது ஆண்டுவிழா இலங்கையில், அதுவும் திருக்கேதீச்சரத்தில் நிகழ்வது பொருத்தமுடையதும், வரவேற்கத்தக்கதுமாகும். இத்தருணத்தில் இவ்விழாவிற் கலந்துகொள்ளத் தாய்நாட்டிலே இருந்து இங்குவந்துள்ள சைவப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் ஈழத்துத் தமிழ்ப் பெருமக்கள் சார்பிற் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பண்டுதொட்டுத் தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவருவதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற அறிஞர்களை இன்றுவரை இருநாடுகளும் 'கொண்டும் கொடுத்தும்' வந்துள்ளதை வரலாறு கூறும். மேலும், தேவாரம் பாடிய நாயன்மார்களுள் இருவர் திருக்கேதீச்சரத்தின் பெருமையைப் பாடிப் பராவியுள்ளனர். அவர்களுள் ஒருவர் ஏழாம் நூற்றூண்டில வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்; மற்றவர் ஒன்பதாம் நூற்றூண்டிலே சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவர். இன்னும் ஸ்ரீ இராமர், இராவணனை வென்று இலங்கையிலிருந்து அயோத்திக்குச் செல்லும்போது வழியில் திருக்கேதீச்சரத்துப் பெருமானை வழிபட்டுச் சென்றூர் என்று தக்ஷிண கயிலாய புராணம் கூறுகின்றது. மேலும், பஞ்சபாண்டவர்களுள் ஒருவனை அருச்சுனன் தீர்த்த யாத்திரையின் பொருட்டு இலங்காபுரிக்கு வந்தான் என்றும், அவ்வாறு வந்த அவன் திருக்கேதீச்சரத்தானை வழிபட்டுச் சென்றுன் என்றும் சொல்லப்படுகின்றது. விசயன் இலங்கைக்கு வந்தபோது அவனோடு கூடவந்த அந்தணன் ஒருவன் சிவாலயம் ஒன்றிற் பூசை வழிபாடு செய்தான் என்று மகாவம்சம் எடுத்துரைப்பதும் திருக்கேதீச்சரத்துச் சிவாலயம் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். ஆறும் நூற்றூண்டிற் பாண்டிய மன்னர்கள் திருக்கேதீசரத்தில் ஆலயத் திருப்பணிகள் [illegible]புரிந்தனர். இன்னும், சோழரின் ஆட்சிக்காலத்தில் திருக்கேதீச்சரத்தின் சிறப்பு உச்ச நிலையை அடைந்தது.

திருக்கேதீச்சரத்தின் பெருமையை நாயன்மார்கள் பாடிப்போந்தனர். திருநாவுக்கரசர் "பூதியணி பொன்னிறத்தர் பூணுனூலார் பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர், கேதீச்சரம் மேவினார்" என்று திருத்தாண்டகத்திற் குறிப்பிட்டுள்ளார். மாணிக்கவாசகப் பெருமான் 'குயிற்பத்திலும்' 'திருவார்த்தையிலும்' இலங்கையில் மண்டோதரிக்கு இறைவன் அருள் செய்த தலம் என்று குறிப்பிட்டுள்ளது திருக்கேதீச்சரமே என்று எல்லோராலுங் கருதப்படுகின்றது. கேது வழிபட்டமையால் 'கேதீச்சரம்' என்ற பெயரைப் பெற்ற இத்தலத்தை வழிபடுவோர் வினைகளும் நோய்களும் தீரப்பெற்று இன்புறுவர்.

"கேடிலாதகே தீச்சரந்
தொழுதெழக்
கெடுமடர் வினைதானே"
என்றும்,

"அண்ணல் நண்ணுகே
தீச்சரம அடைவார்க்கு
அருவினை யடையாவே"
என்றும்,

"முடிகள் சாய்த்தடி
பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே"

என்றும் பலவகையாகத் திருஞான சம்பந்தமூர்த்தி

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

### முதல் மந்திரியைக் கொலைசெய்ய முயற்சியா?

முதல் மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயக்கவுக்கு எதிரான சதித்திட்ட முடையவரெனக் கருதப்படும் முனிப்புறகே லயனல் பர்ணுந்து என்னும் பெயருடைய ஒருவர் இந்திய பாதுகாவலரால் கைதியாக்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளாரென அறிய வருகின்றது.

### தேசியக் கல்வித்திட்டம்

—:—

கல்விமுறையை ஆராய்ந்து ஒரு தேசியக் கல்வித்திட்டத்தை அமைப்பித்தற்கென பன்னிருவர் உறுப்பினராகிய ஒரு ஆராய்ச்சிக் குழுவை அரசாங்கம் நியமிக்கத் தீர்மானித்துள்ளது. இக்குழுவினரால் ஆராயப் படுதற்கு இருபது அம்சங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

——

### ஆங்கிலத்தில் அரசாங்கக் கணக்கு

———

அரசாங்கக் கணக்குகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே அமைக்கப்பட வேண்டுமென்று எல்லா அரசாங்க ஆட்சிப் பகுதிகளுக்கும் மந்திரி சபைக் காரியதரிசி அறிவித்துள்ளார். ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு இந்நிலைமை நீடிக்கக் கூடுமென்று கருதப்படுகின்றது. அதன்பின் சர்வ சிங்களத்துக்கு வேண்டி ஆயத்தங்கள் எல்லாம் பூர்த்தியாகி விடுமென்று கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக வரலாறு

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

# பாலை மருதநில மக்களின் வாழ்க்கை முறை

36 மருதநிலத்து ஊர்

வயலும் வயல்சார்ந்த நிலங்களிலுமுள்ள கிராமம் ஊர் எனப்பட்டது ஊரில் வாழும் மக்களுக்கு உழவு தொழில் முக்கியமாகவிருந்தது. வயல்களின் இடையே தோட்டங்களிருந்தன. தோட்டங்களில் பழமரங்கள் நட்டு உண்டாக்கப்பட்டன கரும்பும் பயிரிடப்பட்டது. ஏர்த்தொழிலுக்குத் துணையாக மாடுகளும் எருமைகளும் வளர்க்கப்பட்டன. வயல்களில் பருத்தியும் பயிரிடப்பட்டது.

உழவரில் உழுவோர் உழுவித்துண்போர் என இரு பிரிவினர் இருந்தார்கள். உழுவித்துண்போர் காணியாளராகிய செல்வராகவிருந்தார்கள். வயலில் வேலை செய்வோர் களமர் எனப்பட்டார்கள். இவர்கள் உழுதல், நாற்றுநடுதல், களைகட்டல், நெல்லரிதல், சூடடுக்குதல், கதிர் மிதித்தல் போன்ற வயல் வேலைகளைச் செய்தார்கள். நாற்றுநடுதல் முதலிய வேலைகள் புரியும்போது இருபாலாரும் பாடல்கள் பாடினார்கள். வயல் செய் எனப்பட்டது, நெல் விளையும் நிலம் நன்செய் எனவும, பிறபயிர்களிடப்படும் நிலம் புன்செய் எனவும் அறியப்பட்டன வயல், அகணி, கம்பலை, கழனி, கைதை, கோட்டம், செறு, தடி, பணை, பண்ணை, பழனம், பானல், புலம முதலியன வயலின் பெயர்கள். பயிர்ச் செய்கை வேள் ஆண்மை எனப்பட்டது. வேள்-நிலம; ஆண்மை - அரசு அல்லது ஆளுந்தன்மை. தானியங்களைச் சேர்த்து வைப்பதற்கு வீட்டு முற்றத்தில் பெரிய நெற்குதிர்கள் கிடந்தன. ஊரில் நன்கு அமைக்கப்பட்ட வீடுகளிருந்தன. வீடுகளின் சுவருக்கு வெள்ளை அடிக்கப்பட்டது சில வீடுகளின் சுவர் செம்மண்ணினால் மெழுகப்பட்டிருந்தது. இங்கு பலநைத்தொழில் புரிவோரும் வாழ்ந்தனர்.

விதைப்புக்காலத்தின் பின்னும அறுப்புக்காலத்தின் பின்னும் மக்களுக்கு அதிக ஓய்வு இருந்தது. அக்காலங்களில் அவர்கள் பலவகைகளில் பொழுதுபோக்கினார்கள்.

உரல், உலக்கை, அம்மி, குழவி, திரிகை, ஆட்டுக்கல், முறம சல்லடை, சட்டி பானை, அகப்பை, பனை,

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

கட்டுப்பெட்டி, கட்டில் தொட்டில், ஊஞ்சல், (வீசுபலகை), உறி (சுமைதாக்கு), காவடி, சும்மாடு, கணப்பு (தீச்சட்டி) பரண், நிறைகோல், கவணை, பாய் முதலியன வீட்டுப்பொருள்களிற் சில.

37 பறந்தலை

பாலை நிலத்து ஊர் பறந்தலை எனவும் சீறூர் எனவும் அறியப்பட்டது. வெயில் வெப்பத்தினால் மரந்தடிகள் தீந்து நீரும் நிழலும் இல்லாதிருந்த இடங்கள் பாலைநிலம் எனப்பட்டன. பறந்தலையில் வாழ்வோர் எயினர் எனப்பட்டனர். இவர்கள் வாழும் குடிசைகள் ஈந்தின் ஓலைகளால் வேயப்பட்டவை. இவர்கள் தானியங்களை விளைவிக்கவில்லை. பெண்கள் வெளியே சென்று எறும்புகள் புற்றுகளில் சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியைச் சேகரித்தார்கள். அதனை முற்றத்திலிருக்கும் நில உரலிலிட்டு உமிபோகக்குத்தினார்கள். கிணற்றிலே நீர் எடுத்துப் பானையில் உலைவார்த்து அடுப்பில் வைத்து ஆக்கிய சோற்றைத் தேக்கிலையிலிட்டு உப்புக்கண்டத்தோடு உண்டார்கள். ஆடவரின் மீசை ஆட்டுக்கடாவின் கொம்புகள் போல் முறுகியிருந்தது. அவர்கள் காலில் செருப்புத்தரித்து, மார்பில் சோகி, சிப்பி முதலியவற்றைக் கோத்து அணிந்திருந்தார்கள்; இரும்பு முனை இறுக்கிய அம்புகளால் விலங்குகளையும் பறவைகளையும வேட்டையாடினார்கள்.

எயினரின் குடியிருப்பைச் சுற்றி மதிலிடப்பட்டிருந்தது மதில் புல்லினால் மேயப்பட்டிருந்தது. எயினர் தலைவனின் தலைவாயிலில் அம்புக்கட்டும், பறையும் தொங்கின வாயிலில் நாய் சங்கிலியிற் கட்டப்பட்டு நின்றது. எயினர் முல்லை நிலத்திலுள்ள பசுக்களைக் கொள்ளையிட்டார்கள் கொள்ளை அடிக்கச் செல்லும்போது ஏறுகோட் பறையை அடித்தார்கள் பறை ஒலியைக்கேட்ட எயினர் வந்துகூடினார்கள்; தாம் கவர்ந்து சென்ற பசுக்களைக் கள்ளுக்கு விலையாகக் கொடுத்தார்கள்.

—தொடரும்.

உ

சிவமயம்

## யாழ்ப்பாணம்

## சைவ பரிபாலன சபை

—————:0:—————

### 72-வது வருடாந்தக்கூட்டம்

ஷ சபையின் 72-வது வருடாந்தக் கூட்டம் நிகழும் சார்வரி௵ மார்கழி௴ உரு உ (8-1-61) ஞாயிறறுக்கிழமை முற்பகல் 9½ மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1. தேவாரம்
2. சென்ற வருடாந்தக் கூட்ட வரலாறு
3. செயலாளரின் வருடாந்த அறிக்கை
4. சைவபரிபாலன சபையினதும் சைவப்பிரகாச அச்சகத்தினதும் பரிசோதிக்கப்பெற்ற 1959—60 - ம் ஆண்டுக் கணக்குகள்
5. C பிரிவுக்கு நிருவாகசபை உறுப்பினரைத் தெரிவு செய்தல்
6. புதுவருடத்துக்குரிய சபை உத்தியோகத்தரைத் தெரிவு செய்தல்
7. 1959-ம் ஆண்டு S. S. C. பரீட்சையில் விசேஷ சித்தியடைந்த பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்குதல்
8. பிரேரணைகள்
9. வேறு விஷயம்
10. நன்றியுரை
11. தேவாரம்

ஆனைப்பந்தி,
21-12-60.

ஆ. தனபாலசிங்கம்
கௌரவ செயலாளர்

மு. கு.

(1) வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள் 28.12-60 க்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(2) அங்கத்துவ சந்தாப்பணம் பாக்கியின்றிக் கட்டத் தவறுவோர் வாக்குரிமையை இழப்பர், ஆகவே அங்கத்தவர் யாவரும் கூட்டத்துக்கு முன் சந்தாவை அனுப்பி வைக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(3) கணக்குச் சம்பந்தமான வினாக்கள் இருப்பின் 31.12.60 க்கு முன் தனாதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.


# தொழில் நுட்பக் கலாசாலை

(SCHOOL OF TECHNOLOGY)

"சிற்றுடெல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

எங்கள் நாட்டின் பொருளாதார விருத்திக்கும், கல்விகற்றும் தொழிலின்றித் தவிக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டவும், தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் பயனுள்ள வகையில் அவர்களைப் பயிற்றவும் இக்கலாசாலை பணி செய்கின்றது தமிழ்ச் சமுதாயத்தை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டின் இளைஞர்களின் நோக்குப் புதிய திசையில் திரும்பவேண்டும்,

## தொழில் நுட்பக் கலையே எதிர்காலத்தில் ஈடேற்றம் தரவல்லது

1. மின்சார சாதனை அமைப்பு வேலை
2. தன்னியக்கிகளின் பொறியியல் கல்வி
3. வானொலிக் கருவிகளைப் பேணும் முறைகள்
4. மின்சார பொறியியலில் சாதனைப் பயிற்சி
5. பொறியியல் சம்பந்தமான வரைதல்
6. அளத்தல் படம்போடுதல் மட்டமாக்குதல் முதலிய உலாந்தாக்கல்வி
7. கட்டட அமைப்பு, திட்டப்படங்கள் வரைதல் முதலியன,

இன்னோரன்ன கலைப்பயிற்சி இக்கலாசாலையில் பெறலாம். பயிற்சித்திட்டங்களை விளக்கும் சூசனப்பிரதிகள், கலாசாலையிற் சேரவேண்டிய விண்ணப்பப்பத்திரங்கள், கலாசாலைக் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

கலாசாலை அதிகாரி.


# உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 1-1-61—7-1-61

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

காணிகள் காணிப்பொருள்கள் மூலம் இந்த வாரம் இலாபங்கள் நிச்சயம். பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பார்கள். தனலாபங்களும் நிச்சயம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1. 2-ம் பாதம்,

குடும்பச்சூழலில் இந்த வாரம் சில பிழை எண்ணங்களுக்கிடமுண்டு, இனத்தவர்களுடன் முரண்பாடுகளுக்கிடமுண்டு. புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனால் சித்தியாகும். எதிரில் நல்ல காலம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ம் பாதம்.

சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு குடும்பக்கருமங்களும் அதிகம் திருத்தியாயிருக்கமாட்டா ஆனால் பணத்துறையில் திரும்பவும் ஒரு அளவுக்கு நல்ல வாரம். இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர்கள் உதவுவார்கள்,

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்

இனத்தவர்களுடன் சில சண்டைகளுக்கிடமுண்டு. ஆனால் நீர் எதிர்ப்பை நீக்கக்கூடியதாயிருக்கும் குடும்ப நிலைமைகளும் திருந்த வேண்டும். செலவதிகரிக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

உமது மனம் அமைதியாயிருக்கமாட்டாது. குடும்பக்கருமங்கள் குழப்பமாயிருக்கும் புது முயற்சிகள் தேவையில்லாமல் தாமதிக்கப்படும். பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்பச்சூழலில் இந்த வாரம் சில பிழை எண்ணங்களுக்கிடமுண்டு, பெண்ணின நண்பர் தொந்தரவு தருபவர்களாவார்கள். ஆனால் உத்தியோகசித்தி நிச்சயம். நல்லகாலம் எதிரில்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பார்கள். இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர்கள் உதவியாயிருப்பார்கள். ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஞாயிறு திங்கள் கவனமாய்க் கழிக்கவேண்டும். வார மிகுதி நன்றாகும். புது முயற்சிகள் நல்ல பலனைத்தரும். வார இறுதியில் கந்தோரில் சில தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முதல் இருநாட்களும் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும் செவ்வாய் புதன் வியாழம் கவனமாய்க் கழிக்கவும். வார மிகுதி திரும்பவும் நன்றாகும் ஆனால் குடும்பக்குழப்பங்களுக்கிடமுண்டு

**மகராராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.


பகைவர் அழிவுக்கிடமுண்டு. இறுதியில் நீர் சித்தியடைதல் நிச்சயமெனினும் புது முயற்சிகள் தடைப்படும். வியாழம் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க்கழிக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பக்கருமங்கள் குழப்பமாயிருக்கும் புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்பட வேண்டும். பணத்துறையில் ஒரு நல்லவாரம். பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தரும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் இந்த வாரம் சில சண்டைகளுக்கிடமுண்டு. பகைவர் அழிவுக்கிடமுண்டு, உத்தியோக சித்தியும் புகழும் நிச்சயம். நல்ல காலம் எதிரில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி

# தங்கபஸ்பம்

உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறு இல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம் இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

**தாளக பஸ்பம்** ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனும்.

**மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.**


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2080

பொன்னம்பலம் தியாகராசா
கரம்பன் —வழக்காளி
எதிராக
கதிரவேலு கந்தையா, சரவணை
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 2080 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1961 ம் ஞூ தை மீ 28 உ சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடசகம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 524 ம் 26-2-58 தொடக்கம் 19-9-58 வரைக்கும் ரூபாய் 300 கசு 12 வீதவட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 137-90.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் தீவுப் பகுதி ஊர்காவற்றுறை சரவணை "ஆலம்புலமும் பாலைக்காடும் நிலப்பரப்பு 40, பனைகளும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு சேதுகாவலர் பொன்னம்பலதகின் உரிமைக்காரரினுதனமும், ரேட்டும், வடக்கு ரேட்டு, மேற்கு வயிரமுத்து ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு ஆறுமுகம் பெண் அன்னப்பிள்ளைக்குப் மறுபேருக்குமுரியவாதனம் இதில் சொரியலாய் ⅓ பங்கு. பதிவுஇல C.84/7

ஆ ச. இராசேந்திரம்
கொமிஷனர்&விலைமதிப்பாளர்
M 162 30-12-60.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

**S. கனகசபை**
Std 14 சிருப்பர்


சங்கானை
அரசடி வயிரவர் கோவில்
**தேர்த்திருப்பணி விஞ்ஞாபனம்**

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவன அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்கவள உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றேம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கோள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,
F 191 19-9-60.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, Trust 26

வைத்திலிங்கம் வடிவேலு
சரவணை ஊர்காவற்றுறை
—வழக்காளி.
எதிராக
வேலுப்பிள்ளை செல்லையா
சரவணை ஊர்காவற்றுறை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் Trust 26-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி, 1961-ம் ஞூ தைமீ 28உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை சரவணை "பூமத்தம்வலடு" நெற் பரப்பு 15. அத்தருவைகளும். எல்லை கிழக்கு அரிகுட்டி பெண் அன்னம்மாவிற்குரிய வாதனம். வடக்கு ரேட்டு, மேற்கு வைத திலிங்கம் கந்தையாவினுதனர், தெற்கு தம்பு செல்லையாவினுதனம்.

ஆ. ச. இராசேந்திரம்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.
M 163 30-12-60.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஏழாலை
கார்த்திகேசு தேவதாசன்
—வழக்காளி.
வழக்கு இல: M.B. 3259
எதிராக
ஏழாலை
கந்தவனம் வயித்திலிங்கம்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3259-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுககாணிகள் 1961-ம் வருடம் தை மாதம் 21-ந் திகதி (21 - 1 - 61) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 400-ம் 22 - 2 - 60 தொடக்கம் 2 -6-60வரைக்கும் ரூபா 300-க்கு 8 வீத வட்டியும், அதன் பின் மூழுத்தீர்வைத் தொகைக்கும் முற்றுகப் பணம் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 172-30 சதமும்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம், டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப்பகுதி, மயிலிட்டி கோயிற்பற்று, தையிட்டி இறை, 'கொழுவான்கலட்டி" (Koluvan kala:dy), நிலப்பரப்பு 8. வடலிகளும் எல்லை கிழக்கு ஆறுமுகம் பாலாத்தைக்கும் மற்றையோருக்குமுரிய காணி. வடக்கு ஒழுங்கை. மேற்கு கந்தர் கணபதிப்பிள்ளையின் உரிமையாளருக்கும் மற்றையோருக்குமுரிய காணி. H. 281/208-ல் பதியப்பட்டது. இதில் சொரியலாக ⅛ பங்கு.

2 ஷ இறை 'கொழுவான் கலட்டி" (Koluvankaladdy) நிலப்பரப்பு 16¼ வான்பயிரும், புளிகளும், வடலிகளும். எல்லை கிழக்கு ஆறுமுகம் பாலாத்தைக்கும் மற்றையோருக்குமுரிய காணி. வடக்கு ஒழுங்கை மேற்கு கந்தர் கணபதிப்பிள்ளையின் உரிமையாளருக்கும் மற்றையோருக்குமுரிய காணி. H 283 209-ல் பதியப்பட்டது. இதில்சொரியலாக 4 பரப்பு.

செ. பாண்டித்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
மல்லாகம், 6-12-60.
(M. 167 30-12-60)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆவரங்கால்
கந்தர் வயித்திலிங்கம்
—வழக்காளி.
வழக்கு இல: M.B, 3132
எதிராக
சிறுப்பிட்டி
1, கார்த்திகேசு குமாரசாமி
2. குமாரசாமி பெண் பொன்னு
– எதிராளிகள,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3132-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1961-ம் வருடம் தை மாதம் 13-ந் திகதி (13-1-61) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- ரூபா 2508-ம், 10-11-59 தொடக்கம் 9-5-60வரைக்கும் ரூபா 2000-க்கு 10 வீத வட்டியும், அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 201-59 சதமும்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப்பகுதி, புத்தூர் கோயிற்பற்று, புத்தூர் தெற்கு இறை, "கொககார்" [KOKKAR], நிலப்பரப்பு 6½ எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு சபாபதி பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். மேற்கு சிவகுருநாதர் கைம்பெண் இளையபிள்ளையின் ஆதனம், தெற்கு சிதம்பரப்பிள்ளை சுப்பரின் ஆதனம், இதடங்கலும். தெற்கெல்லைக் காணியினருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரிமையும். K. 201/186 ல் பதியப்பட்டுள்ளது.

2 ஷ இறை "வண்ணன் சீமா' (Vannanseemah). நிலப்பரப்பு 30 குளி 6 எல்லை கிழக்கு வயிரவநாதர் இராமலிங்கத்துக்குப் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு காலஞ்சென்ற சுவாமிநாதர் கந்தையாவுடைய உரிமையாளருக்கும் பங்காளருககுமுரிய அதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு எல்லுப்போலையனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாக 1/10 பங்கு. K 201/187 ல் பதியப்பட்டது.

சே. பாண்டித்துரை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
Commissioner of Sales & Valuer
மல்லாகம், 17-12-60.
M 166 30—12—60.

# உலகுக்கு ஒரு புலவன் திருவள்ளுவர்

## சிறந்த வாழ்க்கை நெறிகாட்டுவது திருக்குறள்

செல்வி சோ. சரஸ்வதி
சரவணை, வேலணை

திருக்குறள் இன்றல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சங்க காலத்திலே தெய்வப்புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. இந்த அரும் பெரும் நூல் ஒரு மதத்தை வற்புறுத்தவில்லை. ஒரு சாதியை வற்புறுத்தவில்லை. கலையை வற்புறுத்தவில்லை. ஆனல் திருக்குறள் எந்த மொழியில் செய்யப்பட்டதோ அந்த மொழிக்கு இன்றும் பெருமை தந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் நாட்டின் சிறப்பைக் கூறவந்த பாரதியாரும்,

'வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு"

என்று வள்ளுவரின் சிறப்பையும் பெருமையையும் வானளாவப் புகழ்கின்றார். தமிழ் நாட்டுக்கு வள்ளுவனைத்தந்து என்று கூறுது உலகினுக்கே தந்து என்று பெருமையுடன் புகழ்கின்றார். உலகத்தார் உள்ளத்துள் பள்ளிகொண்டார் வள்ளுவர் என்பதை "வையகம் புகழ் ஞானி" என்று பெரியோர் வானளாவப் புகழ்கின்றார்கள்.

கல்வி அணையாத சுடர் விளக்கைப்போன்ற இஃது பலதரப்படும். அறம், பொருள், இன்பம் மூன்றையும் உடையது திருக்குறள். இம் மூன்றையும் செவ்வனே நடாத்துபவன் இறுதியில் வீட்டை அடைவான். ஆகையால் இம்மூன்றையும் கூறிய வள்ளுவர் நான்காவதாகிய வீட்டைக் கூறுதுவிட்டார்.

ஒருவன் இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் இன்பத்தை அடைய வேண்டும். இதற்கு வழிகாட்டியாக விளங்குவது கல்வியே.

"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்று கூறுகின்றார் வள்ளுவர். எழுபிறப்பும் இன்பத்தையடைய விரும்புபவன் கல்விகற்க வேண்டும். எப்படிக் கற்க வேண்டும். கற்பவை கற்கவேண்டும். கற்றுவிட்டால் போதாது கற்ற தன்படி நடக்கவேண்டும் என்னும் உண்மையை,

"கற்றதனல் ஆய பயன்
என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்"

என்று எடுத்துக்காட்டுகின்றார்.

மனிதனை மனிதனுக செய்வது எது? ஒழுக்கம். ஒழுக்கம் இல்லாதவனை உலகம் எள்ளி நகையாடும். எனவே ஒழுக்கமே உயிரினும் பெரிது என்பதை,

"ஒழுக்கம் விழுப்பம்
தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்று மக்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

எப்போதும் மனிதன் பொய் பேசாது, பிறன் பொருளை விரும்பாது நடக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவன் கூறியபடியே காந்தி மகான் உள்ளத்தாற் பொய்யாது வாழ்ந்தார். இதனல் அன்றே இன்றும் உலகத்து உள்ளத்தில் எல்லாம் பள்ளி கொண்டு இருக்கின்றார் அவர் இதன் உண்மையை வள்ளுவரும்,

"உள்ளத்தால் பொய்யா
தொழுகின் - உலகத்து
உள்ளத்து எல்லாம் உளன்"

என்று எடுத்துககாட்டுகின்றார்.

வள்ளுவன் தந்த தமிழ் மறை அரசியலை விரும்புவார்க்கு அரசியல் நூல், ஞானத்தை விரும்புவார்க்கு ஞானநூல், அறத்தை விரும்புவார்க்கு அறநூல், எவன் எதை விரும்புகின்றானே அவ்வ அனைத்தையும் வள்ளுவர் தன் திருக்குறளில் பொதிந்து வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் நாட்டுச் சோதிலிங்கத் தல மகிமை

## ஸ்ரீ. இராமேஸ்வரத்தின் பல சிறப்புக்கள்

சிதம்பரம். நவ 22

ஜோதிர்லிங்க ஸ்தலங்கள் 12ல், செந்தமிழ் நாட்டிலுள்ள இராமேஸ்வரம் ஜோதிர்லிங்க வரலாற்று மகிமைகள் வருமாறு:- (ஸேது பந்தேச இராமேசம்) வங்காளக்குடாக் கடலில் உள்ள ஒரு தீவு இராமேஸ்வரமாகும். இத்தீவை இந்திய நாட்டிலிருந்து "பாமபன்" கால்வாய் பிரித்து வைத்திருக்கிறது. இக்கால்வாய்க்கு மின்சாரத்தால் இயங்கக்கூடிய ஒரு பெரும பாலம் கால்வாயின் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கிறது; கால்வாயினிடையே கப்பல்கள் போகவேண்டுமானுல் பாலத்தின் நடுப்பகுதியை மேலே மின்சார சக்தியால் தூக்கி விடப்படும். அவ்வழியே கப்பல்கள் செல்லும்.

வட இந்தியர்கள் இங்குள்ள ஜோதிர்லிங்க மூர்த்தியை அதிகம் போற்றிவருகின்றனர். செந்தமிழ்நாட்டினர் பிள்ளைப் பேற்றை விரும்பி இங்குவந்து தானங்கள் பல செய்து வருகின்றனர்; இங்கு கடல் ஸ்நானம் மிகவும் விசேஷம், யாத்திரீகர்கள் கங்கையில் நீராடி அங்கிருந்து கங்கை நீர் கொண்டுவந்து ஸ்ரீ இராமநாதருக்கு விசேஷ அபிஷேகங்கள் செய்து வருகின்றனர்.

காசியாத்திரைக்குப் பின்னர் கடைசியாக இராமேஸ்வரம் யாத்திரை செய்து முடித்தால்தான் யாத்திரையின் பலன் சம்பூர்ணமாகக் கிடைக்கும் என்று வரலாற்று மகிமையில் உள்ளது.

ஸ்ரீ இராமநாதருக்கு, கங்கை நீரால் அபிஷேகம் செய்விப்பது சாயுஜ்ப் பதவியை அளிக்கும். அம்பாளின் பெயர் ஸ்ரீ பர்வதவர்த்தனி.

இந்த ஜோதிர்லிங்கம் தேவாரப் பாடல்பெற்றது. இவ்வாலயத்தில் அர்த்தசாம பூசை மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது.

ஆலயத்தின் அமைப்புகள் வருமாறு:- இவ்வாலயம் மிகப் பெரியது. 4 வாயிலையுடையது. கிழக்கு வாயிலோரத்தில் ஸ்ரீ. இராமநாதருடைய சபை உள்ளது. பல மன்னர்களுடைய உருவச்சிலைகள் ஆலயங்களிலுள்ள ஸ்தம்பங்களில் பொறிக்கப்பட்டு அழகான முறையில் காட்சி அளித்துக்கொண்டு வருகின்றன. ஸ்ரீ இராமர் ஸ்ரீ சீதா பிராட்டியாருடனிருந்து, ஸ்ரீ. இராமநாதஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்யும் சித்திரங்களும் கவர்ச்சிகரமான வகையில் வருகின்றன. ஆலயத்தின் வடக்குப்பிரகாரத்தில் சிறந்த ஒரு மண்டபம் உள்ளது; இதன் நீளம் சுமார் 4000 அடி, அகலம் 21 அடி, உயரம் பூமிமட்டத்திலிருந்து 30 அடி, திருமாளப்பத்தி மேடை உயரம் சுமார் 5 அடி, இது உலகிலேயே மிகப்பெரிய பிரகாரமு...யதாகும்.

### தீர்த்தங்களின் மகிமைகள்

இராமேஸ்வரத்திலுள்ள தீர்த்தங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தனவாகும் சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவான், சுந்தமாதனன், இராமர், இலக்ஷ்மணன், அக்கி யுதிஷ்டிரன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், ஹனுமான், அகஸ்தியர் ஆகிய இவர்களின் பெயரால் தனித்தனித் தீர்த்தங்களும், இவற்றுடன் நாக தீர்த்தம் சிவதீர்த்தம் சர்வ தீர்த்தம், கோடிதீர்த்தம் சத்யாமிர்த தீர்த்தம் போன்ற பல தீர்த்தங்களும் உள்ளன.

அக்கி தீர்த்தத்தில் மூழ்கினோர் புண்ணிய தேகத்தையும் மக்கட்பேற்றையும் பெறுவர். பேய்பிசாசம் பிடிக்கப்பட்டோர்க்கும் இத்தீர்த்தம் விலக்களிக்கின்றது. ஸ்ரீ இராமபிரான் இலங்கையிலிருந்து சீதாபிராட்டியை மீட்டு அவளது பரிசுத்தத்தன்மையை உலகுக்கு உணர்த்த அக்கி தேவனை வரவழைத்து அவ்வக்கியில் பிராட்டியாரை மூழ்கச்செய்தார். ஸ்ரீ இராமரும் மனமகிழ்ச்சியோடு சீதாபிராட்டியாரை அழைத்துக் கொண்டார். அக்கி தேவன் சீதாதேவியைச் சோதித்த பாவம் தீரும்படியாகச் சமுத்திரத்திலே ஸ்நானம் செய்து சீதாதேவியை வணங்கினுர், ஸ்ரீ இராமபிரானும் அக்கிதேவனைப்பார்த்து "நீ சமுத்திரத்தில் மூழ்கினமையால் இவ்விடம், அக்னி தீர்த்தம் என வழங்கப்படும் இத்தீர்த்தத்தில் நீராடினோர் அனைவர்க்கும் பாவத்தைப் போக்கி, பதமளிக்கவல்லதொரு தீர்த்தமாக விளங்கும்" என்று அருள்செய்தார். அது முதல் இத்தீர்த்தத்திற்கு அக்னிதீர்த்தமென்று பெயர் வழங்கிவருகின்றது.

இலக்ஷ்மண தீர்த்தம்:- இது இலக்ஷ்மணனுல் நிர்மாணிக்கப்பட்டது. இதில் பலராமர் மூழ்கி பிரமஹத்தி நீங்கப் பெற்ருர். இராம தீர்த்தம் இலக்ஷ்மண தீர்த்தத்தின் கீழ்பால் உள்ளது. இதன் மேல்கரையில் இராமபிரானுக்கு கோயில் உள்ளது.

### தலவரலாறு

இராமேஸ்வரத்தின் வரலாறு வருமாறு:- ஸ்ரீ இராமபிரான் இராவணன ஆண்டு கொண்டிருந்த இலங்கைக்குச் சென்று இராவணனையுங்கும்பகர்ணனையும் கொன்று திரும்பினுர். அப்போது பிரமஹத்தி தோஷம் அவரைப் பற்றியது; அதைப்போக்கிக் கொள்ளுவதற்காகப் பரமேஸ்வரனைப் பூசிக்கத்தக்க இடம் தேடினுர் முனிவர்கள் இத்தீவைவிடச் சிறந்த ஒரு ஸ்தலமில்லை என்று கூற ஸ்ரீ இராமபிரானும் அவ்வாறே இங்கே பூசிக்க விரும்பினுர். நர்மதையிலிருந்து சிவலிங்கம் கொண்டுவருமாறு தன் பக்தன் அனுமானுக்குக் கட்டளையிட்டார், அனுமான் வடக்கேயுள்ள காசிப்பட்டணம் சென்ருர். அங்கே காலபைரவருக்கும் அனுமானுக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது. அதனுல் அனுமார் இராமேஸ்வரம்வர தாமதம் ஏற்பட்டது. பிரதிஷ்டைக்குரிய முகூர்த்த வேளை நெருங்கியது, சீதாபிராட்டியார் மணலால் லிங்கத்தை அமைத்துக்கொடுக்க இராமபிரான் அதைப் பிரதிஷ்டை செய்து பூசித்தார்.

பூசையின் இடைவேளையில் அனுமாரும் லிங்கத்துடன் வந்தார்; தாம் கொண்டுவந்த சிவலிங்கம் ஸ்தாபிதம் பெறவில்லையே என்று அனுமார் கோபம் அடைந்தார். இதனை ஸ்ரீ இராமபிரான் குறிப்பாய் அறிந்து பக்கத்தில் அதனையும் பிரதிஷ்டை செய்வதாகச் சொல்லிப்பார்த்தார், அனு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## சிலாங்கூர் இலங்கைச் சைவ சங்கத்தின் சிறந்த முயற்சிகள்

### முப்பத்து நான்காவது ஆண்டு அறிக்கையில் முக்கிய பகுதிகள்

சென்ற வருடத்தின் அங்கத்தினர்கள் தொகை 502 ஆகும்.

தினமும்மூன்றுகாலம் கோலாலப்பூர் கந்தசுவாமிகோயில் பூசை கிரமமாய்நடைபெற்று வருகிறது. முன் அறிக்கையில் குறிப்பிட்டபடி அன்பர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ஒரு வெள்ளி வீதம் சேர்த்துத் தினபூசை அன்பர்கள் செலவில் நடைபெறுகிறது. இவர்களில் அங்கத்தவர் பலரும் ஏனையோர் சிலருமே. இவ்வாறு கொடுத்துதவும் அன்பர்களின் தொகை 128. இவ்வீகையை இடைவிடாது தொடரும்படி வேண்டுகிறோம்.

நிர்வாகசபை இவ்வருடம் 12 முறைகள் கூடிற்று.

அங்கத்தவர் ஒருவரின் நல்ல முயற்சியால் பூந்தோட்டம் அழகிய நிலையில் இருக்கின்றது. திருத்தங்கள் பரிபாலனம் எல்லாம் இவ்வங்கத்தவர் பொறுப்பிலேயே நடக்கின்றன. இத்தொண்டு மிகவும் போற்றற்குரியது. நன்றி. இது எடுத்துக்காட்டாகிய தொண்டு இத்தகையநற்பணிகளில் பலரும்முன்வரவேண்டுமெனக் கேட்கின்ரேம்.

பூந்தோட்டத்தில் இரண்டு மயில்கள் வளர்க்கப்படுகின்றன. கோவில் இயற்கைவனப்பைக் கவின்பெறச் செய்கின்றன.

திருவிழாக்கள் உரியகாலங்களில் சிறப்பாக நடத்தப் பெற்றன. கோயிலில் நடைபெறும் விழாக்களும் அவற்றைச் செய்பவர்களின் பெயர்களும் அனுபந்தமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. உபயக்காரர்கள் கோயிற் காரியங்களை மிகவும் சிரத்தையுடன் நடத்தி வருகின்றனர். எல்லோருக்கும முருகப் பெருமானது அனுக்கிரகங்கிட்டுவதாக.

சமயகுரவர்களுடைய குருபூசைத் தினங்கள் சிறப்பாக நடைபெற்றன. குருபூசை செய்பவர்களின் பெயர்கள் அனுபந்தமாக இணைக்கப்பட்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## சைவமுந் தமிழுஞ் சிறந்து ........

2-ம் பக்கத்தொடர்ச்சி

சுவாமிகள் திருவாய் மலர்ந்துள்ளார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத்தான்,

"அங்கத்துறு நோய்கள்

அடியார்மேல் ஒழித்தருள்வான்"

என்றும்,

'வெய்ய வினையாய வடியார்மேல்
ஒழித்தருள்வான்''

என்றும்,

ஊனத்துறு நோய்கள் அடியார்
மேல் ஒழித்தருள்வான்''

என்றும், 'குறையாத்தமிழ்''

சாற்றியுள்ளார். எனவே, பயமும் அநீதியும் நிறைந்த இக்காலத்தில் வினையையும் நோயையும் தீர்க்குந் திருக்கேதீச்சரத்தான் கோயிலகொண்டுள்ள இப்பழம்பதியில் இவ்விழா நடைபெறுவது மிகமிகப் பொருத்தமுடையதன்ரே!

...லங்கைக்கு ... சீரும் சிறப்பும உடையதாய்த் திகழ்ந்த திருக்கேதீச்சரம் பதினுறும், பதினேழாம் நூற்ருண்டுகளிற் காலக் கழிவாலும், கவனக்குறைவாலும் பழுதடைந்து சிறப்புக் குன்றுவதாயிற்று. இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இன்னும் அதனைச் சீரழித்துக் கோயில் இருந்தவிடமுந்தெரியாமற் பாழ்படுத்திவிட்டனர். இவ்வாறு சீரழிந்து சிறப்புக்குன்றிய ஆலயத்தைக் கண்டு நாவலர் பெருமான் கலங்கினுர். சீர்திருத்திச்சிறப்புச்செய்ய அவர் உள்ளம் விழைந்தது. எனவே, அப்பெரியாரால் முதன்முதலில் தொடங்கப்பெற்று நடந்துவந்த திருப்பணி வேலைகளை 1948-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார் மேற்கொண்டு செவ்வனே பணியாற்றி வருகின்றனர் அச்சபையார் ஆலயப் புனருத்தாரண வேலைகளோடு, ஆலயத்தைச்சார்ந்த இடங்களையும் சீர்திருத்தி ஆக்கப் பணிகள் பல செய்து வருவதைச் சைவப் பெருமக்கள் நன்கு அறிவர். பிள்ளைகள் கல்வி கற்பதற்குப் பாடசாலை ஒன்றையும், அடியார்கள் தங்குவதற்கு மடங்களையும் சபையாரின் உழைப்பாற் பெற்றுள்ளோம். இன்னும் குருகுலம் ஒன்றை நடாத்த எடுத்துக்கொண்ட முயற்சி பயனளித்துள்ளதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன். அனைதைக் குழந்தைகள் விடுதியொன்றையும், மங்கையர் இன்னல் சங்கம் ஒன்றையும் நிறுவ ஆவன செய்துள்ளதையும் இங்கு குறிப்பிடுகின்றேன். இவ்வாறு சீர்படுத்தப்பெற்ற இப் பழம்பதியில் நாம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 55-ஆவது ஆண்டு விழாவை இன்று கொண்டாடுகின்ரேம். அதனுல் கேதீச்சரத்தானை வழிபட்டு இன்னருள் பெற முடிவதோடு, இவ்விழா நிகழ்ச்சிகளிற் கலந்து அறிவுரைகளைக் கேட்டுப் பெரும் பயனடையவும் அரிய வாய்ப்பு நமக்கெல்லாம் கிடைத்துள்ளது. இவ்விழாவிற் பங்கு கொண்டு சிறப்பிக்க வந்துள்ள உங்கள் எல்லோரையும் பொதுவாக இவ்வூர்ச் சைவப் பெருமக்கள் சார்பிலும், சிறப்பாகத் திருக்கேதீச்சரத்துத் திருப்பணிச் சபையார் சார்பிலும் உள்ளம் உவந்து வருக; வருக என்று கூறி வரவேற்கின்றேன்!

—தொடரும்

பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்
வண்ணார்பண்ணை
—0—

மேற்படி கோவில் வருடாந்தக் கூட்டம் நடந்ததாகச் சொல்லி இக்கோவிலிலும் இதன் தருமத்திலும் ஒரு தொடர்புமில்லாத கூட்டத்தார் சில பத்திரிகைகளில் பிரசுரம் செய்வித்திருக்கிருர்கள். ஆனல் மேற்படி கோவில் பல ஆண்டுகளாக திரு. சு. கனகசபை, சிருப்பர், 478/5 கே. கே. எஸ். ரோட் வண்ணார்பண்ணை அவர்களின் சொந்தச் செலவில் மேற்படி கோவில் புதுப்பித்தும், பரிபாலிக்கப் பட்டும் வருகிற தென்பதை பொது மக்களுக்கு அறியத் தருகிறேன்.

இப்படிக்கு,
சு. கனகசபை
மேற்படி கோவில்
முகாமைக்காரரும், மனேச்சரும்.
M, 169, 30-12.60.

அடைவுநகை
ஏலவிற்பனவு விளம்பரம்

கோப்பாய் தெற்கில் அரசாங்க உத்தரவுடன் அடைவுபிடிக்கும் இராமலிங்கம் சரவணமுத்து என்பவரிடம் 4-4-54, 23-10-54, 28.7 55, 31-8-55, 5-3-56-லும், 1-2-57 தொடக்கம் 30-11-59 வரைக்கும் அடைவு வைக்கப் பட்டு மீட்கப்படா திருக்கும் நகைகள் 1961-ம் வருடம் தை மாதம் 28-ந் திகதி (28-1-61) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் ஷை கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

செ. பாண்டித்துரை,
ஏலதாரர்,
Commissioner of Sales, Valuer and Auctioneer,
மல்லாகம்
27-12-60,
M. 168 30, 6-1-61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலாங்கூர் இலங்கைச்

5-ம் பக்கத் தொடர்ச்சி

டிருக்கிறது. திருத்தொண்டர்கள் குருபூசை ஏழாவது முறையாக நிகழ்த்தப்பெற்றது. இதன் விபரம் திருத்தொண்டர் புராணத்தின்கீழ் தரப்பட்டிருக்கிறது.

பெரியபுராணப் படிப்பு வழக்கம்போல் ஆரம்பித்து சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத்தினத்தன்று பூர்த்தியாயிற்று. புராணங்களுள் தலைசிறந்ததாகிய திருத்தொண்டர் பெரிய புராணம், சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அனுட்டித்து முத்திபெற்ற அடியார்களுடைய அன்புநிலையை விளக்குவதால் பக்திமார்க்கம் பரவும் நோக்கத்துடன் பெரிய புராணப் படிப்பு பூர்த்திவிழா முறையே சொற்பொழிவுகளுடனும் மகேஸ்வர பூசையுடனும் கொண்டாடப்பெற்று வருகின்றது.

கந்தபுராணப் படிப்பு வழக்கம்போல் இவ்வாண்டும் படிக்கப்பெற்று வள்ளிநாயகிபடிப்புடன் முடிவுற்றது. இப்படிப்பில் பங்குபெற்று தொண்டாற்றிய அன்பர்கள் எல்லோருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இவ்வாண்டும் வழக்கம்போல திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பொருள் சொல்லப்பட்டதுடன் திருப்பள்ளியெழுச்சி ஆராதனைகளும் நடைபெற்றன. திருவெம்பாவைத் தினங்களுக்கு வழக்கத்திலுமிருந்து அதிக சைவாபிமானிகள் தரிசனஞ் செய்தது குறிப்பிடக் கூடிய தொன்றாகும்.

சைவப்பெரியார்கள் கோலாலம்பூருக்கு வரும்போதெல்லாம் அவர்களைக்கொண்டு இக் கோவிலில் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்விப்பது இச் சங்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

(1) மதுரை ஆதீனம் முத்தமிழ்மணி யாழ்ப்பாணம். வண்ணை பிரம்மஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்களின் கதாப்பிரசங்கம் பலநாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது. திருவிளையாடற் புராணத்திலிருந்து பல கதைகளை, இனிய தமிழ்நடையில் எடுத்துச் சொன்னார்கள், இத்துடன் தேவார திருவாசகப் பாடல்களை மிக உருக்கமாகப்பாடி மெய்யன்பர்களைப் பரவசப்படுத்தினார்கள்.

(2 பாலகவி வயிநாகரம் திரு இராமநாதன்செட்டியார் அவர்கள் திறன் ஆய்வோடு இருசொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பெரியபுராணத்தின் சிறப்பையும், சேக்கிழாரின் செந்தமிழ் நடையின் அழகையும் சிறப்பாக எடுத்தியம்பினார்கள்.

(3) புதுடில்லி இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ரெங்கநாத ஆனந்த மகர்ராஜ் அவர்கள் கணேசர், கார்த்திகேயன் ஆகிய தெய்வங்களின் சிறப்பியல்புகளை அழகாகச் சொல்லி அரிய சொற்பொழிவொன்று ஆற்றினார்கள்.

கந்தசஷ்டி ஆறு நாட்களிலும் ஆறுமுகசுவாமி பலவர்ண மின்சார வெளிச்சங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வசந்த மண்டபத்தில் எழுந்தருளப்பெற்று பஞ்சவிப்சதி கௌமிஞ அபிஷேகம் ஆராதனைகள் சண்முக அர்ச்சனை முதலியன சிறப்பாக நடத்தப்பெற்றன. இதனைத் தொடர்ந்து சூரசம்ஹார திருக்கல்யாண விழாக்கள் விதிமுறைப்படி மிகவிமரிசையாக நிறைவேறின.

மாதாந்தக் கார்த்திகைநன்னாள் முருகப்பெருமானை வழிபடுவோருக்கு மிகச் சிறந்த புனித தினமாகும். இதன் காரணமாக திருக்கோயிலில் அபிஷேகம் விசேஷ பூசை, பஜனை நடைபெறுகின்றன. இத் தினத்தில் யாவராயினும் கார்த்திகேயனை மெய்யன்போடு வழிபடில் அவர்வேண்டும் வரங்களைக் கொடுத்து முத்தியை அருளிச் செய்வதாகச் சிவபெருமான் கார்த்திகைப்பெண்களுக்குத்திருவாய் மலர்ந்தருளினார் இவ்வரலாற்றைக் கந்தபுராணம் உற்பத்தி காண்டம் சரவணப்படலத்திற் காண்க அன்பர்கள் இவ் வழிபாட்டை அனுசரித்துப் பேரின்பத்தை அடையுமாறுவேண்டிக்கொள்கிறோம்.

இவ் வருடமும் வழக்கம்போல் மகாசிவராத்திரி சிறப்பாக நடந்தேறியது. அன்றிரவு முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது C S. S. மணியாகவதர் அவர்களின் கதாகாலட்சேபமாகும். கண்ணப்ப நாயனாரின் வரலாற்றை பக்திச்சுவை ததும்ப இனிய பாடல்களுடன் எடுத்துரைத்தார்.

வழக்கம்போல் மணவாளக்கோல விழா சிறப்பாக நடைபெற்றது.

கூட்டு வழிபாடு வெள்ளிக்கிழமைகளிலும் விசேடதினங்களிலும் கோவிலில் நடந்து வருகின்றது. ஆனால் இம்முறையை இல்லங்களிலும் கொண்டாடுவது சாலப் பொருந்தும். நல்ல பலன் அளிக்கும் என்ற நன்னோக்கத்துடனும் நம்பிக்கையுடனும் ஏற்பாடுகள் செய்து சில மாதங்களாகப் பல அன்பர் இல்லங்களில் சிறப்பாக நடந்துவருகின்றது. இதைப்பற்றி ஒருவேண்டுதல் ஒருதர் தம் இல்லத்தில் ஒரு வாய்த்த நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தம் குடும்பம் உற்றார் உறவினர் மற்றும் வேண்டியவர்களும் கூடி தம் இஷ்டதெய்வமுன்னிலையில் மங்களப் பொருள்கள் விளங்க தீப ஒளி பிரகாசிக்க இறை வழிபாடுசெய்தல் அகச்சுத்தி புறச்சுத்திக்கு ஏதுவாயிருப்பதுமன்றி ஈஸ்வர கடாட்சமும் ஏற்படும் இதுமட்டுமன்றி அருள் பொலியும் அன்பு மிளிரும், அன்னியோன்னியமான சமய உறவுணர்ச்சியும், தெய்வீக சக்தியும் வளரும். தம் அன்புக்குரியவர்கள் முகங்களை ஒருங்குசேர்ந்துகாணவும் அளவளாவவும் சந்தர்ப்பம் அளிக்கும் இது பெரியோர் கண்டமுறையும் அனுபவமும். இவ் வழக்கம் தொன்றுதொட்டிருந்தது, ஆனால் நாளடைவில் நவநாகரீக மோகத்தால் நலிந்துவிட்டது. பெரியோர்களின முயற்சியினால் மீண்டும் இவ் வழிபாட்டு முறை தாய்நாடு மற்ற இடங்களிலும் புத்துயிர் பெற்று வளர்கின்றது. இக்கூட்டு வழிபாட்டு முறையும் ஒரு துன்பம் துடைக்கும் அரிய சக்தியெனப் போற்றப்படுகின்றது. அஃதுபற்றி அன்பர்கள் தம் இடம், பொருள் ஏவலுக்குத்தக்கபடி வாய்ப்புக் கிடைத்தபோது இவ் வழிபாட்டு முறையை ஏற்று மற்றும் தமக்கு வேண்டியவர்களையும் இதனைக் கையாள ஊக்குவித்து விட வேண்டுமென்பது சங்கநோக்கங்களில் ஒன்று. இதுவரை சென்ற ஐந்து மாதங்களுக்குள் ஒன்பது இல்லங்களில் பெரும் குதூகலத்துடனும் உற்சாகத்துடனும் வழிபாடு நடத்தப்பெற்றது ஒவ்வொரு இடத்திலும் பிள்ளைகள், ஆண்கள், பெண்கள் நூற்றுக்கு மேற்பட்டவராக வந்து கலந்துகொண்டது பாராட்டத்தக்கது. இதனைச் சோரவிடாது ஒவ்வொரு அங்கத்தவர் வீட்டிலும் இது நடைபெறவேண்டுமென்பது எங்கள் பேரவா. இதன் நிமித்தமாக எத்தகைய உதவியையும் செய்யச் சித்தமாக விருக்கிறோமென்பதைத் தெரிவிக்கின்றோம், இப்போது தற்காலிகமாக ஒருமுறை வகுத்திருக்கப்பட்டிருக்கின்றது பின் இதனைத் திருத்தியும், பெருக்கியும் நல்ல முறையில் அச்சிட்டு வழங்க எண்ணியுள்ளோம்.

—0—

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 30-12-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

## கோயிலாக்கண்டிச் சிவன்கோயில் நிதி

| | ரூ. ச |
|---|---|
| முன் சேர்ந்த தொகை | 797-65 |
| பண்டிதர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அரசினர் பயிற்சிப் பாடசாலை பலாலி | 5-00 |
| திரு ச. அமிர்தலிங்கம் திருக்கோணமலை | 30-00 |
| திரு. எஸ். சேதுகாவலர் சுளிபுரம் | 5-00 |
| | 837-65 |

## திருவனந்தபுரத்தில் சைவ சித்தாந்த மகாநாடு

சிதம்பரம். டிச. 25

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் திருவனந்தபுரம் ஸ்ரீ சித்ரா இந்துமத நூல்நிலையக் கட்டடத்தில் 22-12-60 மாலை 5-வது சைவ சித்தாந்த மகாநாடு ஆதீன திருமுறைப் பாராயணத்துடன் ஆரம்பமாகியது. கேரள இராச்சிய முதல் அமைச்சர் ஸ்ரீ. பட்டம் தாணுப்பிள்ளை மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவப்பேராசிரியர் ஸ்ரீ. டி. எம். பி. மகாதேவன் மாநாட்டுக்குத் தலைமைவகித்தார். திருவாவடுதுறை ஆதீன 21-வது குருமகா சந்நிதானம், கேரள இராச்சிய தேசாதிபதி ஸ்ரீ. வி. வி கிரி முதலியோர்கள் ஆசியுரைகள் படிக்கப்பட்டன.

4-வது மகாநாட்டின் மலரும், சைவம், சமயம், வேதாந்தம் என்ற நூலின் மலையாள மொழிபெயர்ப்பு நூலும் மகாநாட்டில் வெளியீடு செய்யப்பட்டன.

மகாநாடு மேலும் 23, 24 இரு தேதிகளிலும் நடைபெற்றது. மகாநாட்டில் ஆதீன மகா வித்துவான்களான ஸ்ரீ கே. ஆறுமுகநாவலர், ஸ்ரீ. ச. தண்டபாணி தேசிகர், ஆதீன வித்துவான் ஸ்ரீ. வீரசிவம, சென்னை ஸ்ரீ. அ. ச. ஞானசம்பந்தம், ஸ்ரீ கி. வா. ஜெகந்நாதன் முதலியோர் பேசினர்

(திரு. மா. பா. தினமணிகிருபர்)

## ஆறு அறிவைப் பெற்றும்...

(முதற்பக்கத் தொடர்ச்சி)

போட்டியிட்டு உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்படுத்துகின்றன

ஒருநாட்டிலே உள்ள செல்வத்தை இன்னொரு நாட்டவர் களவாகச் சூறையாடுகின்றார்கள்.

மனிதர்களிடையே காணப்படும் மிருக உணர்ச்சி காரணமாகப் பலவந்தமும் கொலைக் குற்றங்களும் நடைபெறுகின்றன.

குடும்பச் சண்டைகள் மிகப்பல. இப்படியாக எண்ணிறந்த குற்றங்கள் உலகத்திலே நடைபெறுகின்றன.

மனிதர் மனிதராக வாழ வேண்டுமானால் எல்லா மக்களிடையேயும் அன்பு, ஒற்றுமை, சீவகாருண்ணியம், நல்லொழுக்கம், நடுநிலைமை, கடவுள்பக்தி முதலிய சிறந்த கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

## திருவெம்பாவைக் கூட்டு வழிபாடு

மார்கழி மீ 10 உ சனிக்கிழமை தொடக்கம் அதிகாலை 3-30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சந்நிதியிலிருந்து ஆரம்பமாகி நல்லூர் வட்டார வீதிகள் தோறும் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி படிக்கப்பெறுகின்றன. பிரம்ஹ ஸ்ரீ. C. S. S மணிபாகவதர் அவர்கள் இத்தொண்டை ஆரம்பித்து வைத்துள்ளார்கள்.

## செந்தமிழ்நாட்டுசோதிர்லிங்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மானின் கோபம் தணிந்தபாடில்லை, இராமபிரான் இம் மணல் லிங்கத்தை அப்புறப் படுத்திவிட்டால் பிறகு நீ கொண்டுவந்ததை இங்கே ஸ்தாபிதம் செய்துவிடலாம் என்றார். அனுமாருக்கு ஆறுதல் உண்டாயிற்று. அனுமார் மணலால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தைத் தன் வாலினால் கட்டி இழுத்தார். ஆண்டவன் அசலமூர்த்தியானார். அனுமானின் வாலறுபட்டது, இலிங்கம் அசையவேயில்லை, அனுமார் மயங்கி விழுந்தார். அவ்விடத்தில் அனுமாருக்கு கோயில் இருக்கின்றது, அதன் பக்கத்தில் மலை இன்றும் செந்நிறமாகவே இருந்து காட்சி அளித்து வருகின்றது. அனுமார் மயங்கி விழுந்ததைக் கண்டு வருந்திய இராமபிரான் அனுமனை எழுப்பிவிட்டு அனுமார் கொண்டுவந்த சிவலிங்கத்தை வடபுறம் ஸ்தாபிதம் செய்தார், இராமநாதப் பெருமானுடைய திருமேனியில் அனுமார் கட்டி இழுத்ததின் அடையாளமாக மூன்று ரேகைகள் இன்றும் பதிந்துள்ளதைக் காணலாம்.

தனது மனைவி சீதாதேவியைக் கவர்ந்து சென்ற இராவணனைக்கொன்று சீதாதேவியை மீட்க எண்ணிய இராமன் வானர சைன்யங்களுடன் தென்சமுத்திரக் கரையை அடைந்தார், கொடிய இராக்ஷசனான இராவணனது பலத்தைக்கேட்டுக் கலங்கிய இராமன் குடிப்பதற்கு நீர் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். ஆனால் கொண்டுவந்த நீரை சிவ பூசை செய்யாமல் குடிப்பதற்கு மனமின்றி சிவபூசை செய்து அந்த சுத்தமான நீரைப் பகவானுக்கு நிவேதித்தார், அப்பொழுது பிரசன்னமாகிய சிவபெருமான் இராமனுக்கு இராவணனைக் கொல்லக்கூடிய வலிமையை அளித்தார். பின்புதான் இராமன் கடலில் அணைகட்டி இலங்கைக்குச் சென்று இராவணனை வென்றார். இராமனால் பூசிக்கப்பட்ட இந்த லிங்கம் இராமேசம் எனப்படும்.

பாரத நாட்டின் தென்கோடியில் உள்ளது இந்த க்ஷேத்திரம், மீனாட்சிசுந்தரேசருடைய ஆலயம் இருக்குமிடமாகிய தென்மதுரையிலிருந்து சுமார் 72 மைல் தொலையில் இவ்வாலயம் அமைந்திருக்கின்றது, தமிழைப் பாதுகாத்த சேதுபதிகளால் இவ்வாலயம் முன்னர் கண்காணிக்கப்பட்டு வந்தது. இவ்வாலயத்திற்குச் சேதுபதிகளேயன்றி, சேர, சோழ, பாண்டியரும், பரோடா, இந்தூர், ராஜகோட், பலிப்பூர் முதலிய இடங்களிலுள்ள இந்து மன்னர்களும் நிபந்தங்கள் அளித்துள்ளனர். மிகப்பல திருவாபரணங்களும், தங்கத்தகடுகள் பதியவைத்துள்ள வாகனங்களும், பல்லக்கும் இங்கே உள்ளன.

—தொடரும்.

(திரு. மா. பா தினமணி கிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org